4. அரசினர் தீர்மானம்

சட்ட மன்ற விதி 23 (1) ன் கீழ் தீர்மானம்

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Chairman, I move—

"That rule 23 (1) of the Tamil Nadu Legislative Council Rules be suspended and this House do resolve to transact Government business on Saturday, the 19th August 1972".

MR. CHAIRMAN : Motion moved—

"That rule 23 (1) of the Tamil Nadu Legislative Council Rules be suspended and this House do resolve to transact Government business on saturday, the 19th August 1972".

The motion was put and carried.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(i) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72.)

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1948), தமிழ் நாடு 1963 ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1963) முதலியவற்றின் விதித்துறைகளின் கீழ் இழப்பீட்டுத் தொகை அல்லது தண்ணீர் படி கணக்கிடுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் கூறுகளில் தண்ணீர்த் தீர்வையும் ஒன்றாகும். தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டம்

@ 88-91 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 19] [திரு. ப. உ. சண்முகம்]

(தமிழ்நாடு சட்டம் 8/1963) 1962 ஜூலை 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்த பின்னர், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் கீழ் விதிக்கத்தக்க கூடுதல் தண்ணீர் தீர்வையானது, பல்வேறு எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகை அல்லது தண்ணீர் படியைக் கணக்கிடும் காரியத்திற்காகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தது. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு, 8-வது சட்டத்தின் கீழ் விதிக்கத்தக்க கூடுதல் தண்ணீர்த் தீர்வையானது, பல்வேறு எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் கொடுக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை அல்லது தண்ணீர்ப் படியைக் கணக்கிடுவதற்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்பது அரசின் நோக்கமாகும். எனவே, தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 2, 17-வது பிரிவுகளைத் திருத்தவும், தொடர்புள்ள கால அளவுகள் அனைத்திற்கும் பொருந்தும் வகையில் இத்திருத்தங்கள் முன்னர் ஒரு நாளிலிருந்து செயலுக்கு வருமாறு செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு 1964 ஆம் ஆண்டு வரி வசூலிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1964), தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் மூலம் சென்னை மாநகருக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ரத்து செய்யப்பட்டுள்ள '1951 ஆம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரிச் சட்டம்' '1957 ஆம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டம்' ஆகிய சொற்றொடர்களை நீக்கி தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு 8-வது சட்டத்தில் 10-வது பிரிவைத் கருதந்தவாறு திருத்த இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

சட்டத்தின் விதித்துறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதில் எழக்கூடிய இடர்ப்பாடு எதனையும் நீக்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்க தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு 8-வது சட்டத்தின் 15-வது பிரிவு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. சட்டத்தின் விதித்துறைகளை மாற்றுவதன் மூலம் ஓர் ஐயப்பாட்டினை அல்லது இடர்ப்பாட்டினை நீக்குவதற்கான அதிகாரமானது சட்டம் இயற்றுவதற்கான அதிகார மன்றத்தில் அதிகாரத்தைச் செலுத்துவதாகும் என்றும், ஆகவே இந்த அதிகாரம் நிர்வாக அதிகார மன்றத்திற்கு பிரித்துக் கொடுக்கப்பட முடியாது என்றும் தலைமை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பில் கூறி உள்ளது. எனவே, இவ்வாய்ப்பைப்

பயன்படுத்திக் கொண்டு மேற்படி சட்டத்தின் 15-வது பிரிவை நீக்கி விட்டு, தொடர்பான அவசியமான திருத்தங்களைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சட்ட வரைவு மேற்கண்ட நோக்கங்களை எய்த விழைகிறது.

இத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான வேண்டுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை முன்வடிவு எண் 27/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. அய்யணன் அம்பலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்டுக்கொள்ளுகிறேன் இந்த மசோதாவின் விதிகள் அவ்வளவும் ஆங்கிலத்தில் வருகிற காரணத்தால், என்னைப் போல ஆங்கில அறிவு அதிகமில்லாதவர்கள் படித்துப் புரிந்து கொண்டு வாதம் செய்வது மிகக் கடினமாக இருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கு எப்படிப் பட்ட 'பில்' வந்தாலும், அமைச்சர் தமிழில் அதற்கான வரைவுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் தமிழ் மட்டும் கற்றவர்கள், ஆங்கிலம் அதிகம் தெரியாதவர்கள், இவற்றைப் புரிந்து கொள்ளுவதில் தடுமாற்றம் காரணமாக இவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இனி வரும் காலத்தில் தமிழாக்கம் கூட இருக்கச் செய்வது சரியாக இருக்கும். தமிழிலேயே சட்டம் எழுத நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு தமிழில் கொடுப்பது நல்லது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, கருத்து மாறுபாடு தெரிவிக்கவில்லை. முக்கியமான நோக்கத்தைப் பற்றிப் படிக்கும் பொழுது விளக்கம் தந்திருக்கிறேன். 1963 ஆம் ஆண்டு போடப்பட்ட சட்டத்தின் மூலம் கூடுதல்

தண்ணீர்த் தீர்வை விதி என்று சட்டம் போடப்பட்டது. அப்படிக் கூடுதல் தண்ணீர்த் தீர்வை விதிப்பின்கீழ் கணக்கிடும்பொழுது அதைச் சேர்ப்பதில்லை. இதை எடுக்கக் கூடாதென்பது அரசின் நோக்கம். 1963-ல் இருந்த அரசாங்கம் அதிகாரிகளுக்கு அதற்கேற்ப கணக்கில் எடுக்க வேண்டாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. ஏற்கெனவே பிறப்பித்த ஆணைக்குச் சட்ட உருவம் கொடுக்கத்தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறில்லை. சட்டம் முரண்படக் கூடியதென்று அங்கத்தினர் கவலைப்படுவதாகத் தெரிகிறது. இந்தச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72) நிறை வேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை

(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1963-ம் ஆண்டு கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர் தீர்வை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/1963), வருவாய்க் கணக்கு களில் நன்செய், புன்செய் மானவாரி நிலங்களெனப் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்காக, சந்தர்ப்பத்திற்கேற்ப, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பதற்கு வகை செய்கிறது. ஆயினும், வரி விதிக்கப்பட்ட தரிசு நன்செய் நிலங்களுக்குக் கூடுதல் நிலவரி விதிப்பதற்கும், புறம்போக்கு நிலங்கள் வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் (புன்செய் அல்லது மானவாரி), விதிக்கப்படாத தரிசு நிலங்கள் ஆகியவற்றிற்குக் கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பதற்கும் மேற்படி சட்டம் வகை செய்யவில்லை. மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், நன்செய் நிலங்கள், பாசனப் புன்செய் நிலங்கள் ஆகியவற்றின் உடைமையாளர்கள் முறையே கூடுதல் நில வரியையும், கூடுதல் தண்ணீர் தீர்வையையும் செலுத்துகையில், மேற்குறிப்பிட்ட நிலங்களை மேற்படி சட்டத்தின்

@ 91-92 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.